## ஒலிவேறுபாடு அறிந்து சொற்களுக்கு பொருள் அறிதல்

தமிழில் ரகர – றகர வேறுபாடு, லகர – ளகர – ழகர வேறுபாடு, னகர – ணகர வேறுபாடு ஆகியவற்றை உணர்ந்து, அவற்றால் ஏற்படும் பொருள் வேறுபாட்டைப் புரிந்து எழுதுவதே இந்தப் பகுதியில் கேட்கப்படும் வினா. இந்த வேறுபாட்டை அறியாமல் எழுதும்போது ஏற்படும் பிழைகளை 'மயங்கொலி பிழைகள்' என்பர்.

### 1. ரகர, றகரச் சொற்களின் பொருள் வேறுபாடுகள்

| | | |
|---|---|---|
| 1. | அரம்<br>அறம் | ஒரு கருவி<br>தருமம், ஈகை |
| 2. | அரி<br>அறி | திருமால், சிங்கம், அறுத்தல்<br>தெரிந்து கொள் |
| 3. | அரவு<br>அறவு | பாம்பு<br>நீக்கம் |
| 4. | அரு<br>அறு | அரிய, அருமையான<br>துண்டி, வெட்டு |
| 5. | அருகு<br>அறுகு | பக்கம், அண்மை<br>ஒரு புல் |
| 6. | அருந்து<br>அறுந்து | உண், சாப்பிடு<br>அறுபட்டு |
| 7. | அரை<br>அறை | பாதி, இடை (மாவை அரை)<br>(வீட்டின்) அறை, கன்னத்தில் (அறை),சொல் |
| 8. | அலரி<br>அலறி | ஒருவகைப் பூ<br>கதறி |
| 9. | ஆர<br>ஆற | நிறைய<br>தணிய, புண்ணாற |
| 10. | இர (இரப்பு)<br>இற (இறப்பு) | வேண்டு, பிச்சையெடு<br>கட, சா |
| 11. | இரங்கு<br>இறங்கு | மனமுருகு, அருள் கூர்<br>கீழிறங்கு |
| 12. | இரு<br>இறு (இறுத்தல்) | உட்கார்<br>அறு, வடி (நீர்), கெடு, முறி. |
| 13. | இரும்பு<br>இறும்பு | ஓர் உலோகம், கரும்பொன்<br>சிறுமலை, புதர், குறுங்காடு. |
| 14. | இரை<br>இறை | விலங்குணவு, தீனி, ஒலி.<br>சிதறு, வரி, அரசன், கடவுள், (தண்ணீர்)இறை. |

| | | |
|---|---|---|
| 15. | இரைச்சி<br>இறைச்சி | உரிப்பொருள்<br>மாமிசம், புலால் |
| 16. | உரல்<br>உறல் | மாவிடிக்கும் (உரல்)<br>பொருந்துதல், அடைதல் |
| 17. | உரவு<br>உறவு | வலிமை, நஞ்சு<br>கலந்து வாழ்தல் |
| 18. | உரி<br><br>உறி | கழற்று, தோலுரி, மரப்பட்டை, அரைப்படி, சுதந்தரம்.<br>நெய், (மோர்) உறி. |
| 19. | உரிய<br>உறிய | சொந்தமான<br>உறிஞ்ச |
| 20. | உரு<br>உறு | வடிவம், உருவம்<br>பொருந்து, மிகுதி |
| 21. | உருமு<br>உறுமு | இடி<br>புலியின் ஒலி (உறுமல்) |
| 22. | உரை<br>உறை | சொல், பேசு<br>இறுகு, மூடி, இடம் |
| 23. | ஊர<br>ஊற | நகர, பரவ<br>சுரக்க, நனைய |
| 24. | எரி<br>எறி | தீ, நெருப்பு, எரிதல்<br>வீசு, வீசியெறி |
| 25. | ஏரி<br>ஏறி | பெரிய குளம், நீர்நிலை<br>மேலே ஏறி |
| 26. | கர<br>கற | ஒளிந்து கொள்<br>பால்கற, பீச்சு |
| 27. | கரி<br>கறி | யானை, அடுப்புக்கரி<br>கடி, (காய்)கறி, மிளகு |
| 28. | கருத்து<br>கறுத்து | எண்ணம்<br>கோபித்து, சினந்து |
| 29. | கருப்பு<br>கறுப்பு | பஞ்சம்<br>கருமை நிறம் |
| 30. | கருவி<br>கறுவி | ஆயுதம்<br>கோபித்து |
| 31. | கரை<br>கறை | ஓரம், குளக்கரை<br>களங்கம், மாசு, குற்றம் |
| 32. | கீரி<br>கீறி | ஒருவகைப்பிராணி<br>கிழித்து, எழுதி |
| 33. | குரங்கு<br>குறங்கு | வானரம், மந்தி<br>தொடை |
| 34. | குரம்<br>குறம் | குளம்பு<br>குறத்தி சொல்லுங்குறி |

| | | |
|---|---|---|
| 35. | குரவன்<br>குறவன் | பெரியோன், ஆசான்<br>ஒரு குலத்தான் |
| 36. | குரவை<br>குறவை | கூத்து<br>ஒரு வகை மீன் |
| 37. | குரு<br>குறு | ஆசிரியன், சிறு, பரு<br>குட்டையான |
| 38. | குருகு<br>குறுகு | நாரை<br>அணுகு, கிட்டு |
| 39. | குருக்கு<br>குறுக்கு | ஒரு செடி<br>நடு முதுகு, நடு, இடை |
| 40. | குறும்பி<br>குறும்பு | புற்றாஞ்சோறு<br>பொல்லாங்கு |
| 41. | குரும்பை<br>குறும்பை | தென்னை, பனை முதலியவற்றின் பிஞ்சு<br>ஓர் ஆடு |
| 42. | குரைத்தல்<br>குறைத்தல் | குலைத்தல்<br>சுருக்குதல் |
| 43. | கூரிய<br>கூறிய | கூர்மையான<br>சொல்லிய |
| 44. | கூரை<br>கூறை | முகடு, வீட்டின் மேற்புறம்<br>துணி, புடவை |
| 45. | கோரல்(கோருதல்)<br>கோறல் | விரும்புதல், வேண்டுதல்<br>கொல்லுதல் |
| 46. | சாருதல்<br>சாறுதல் | சார்ந்திருத்தல்<br>தானியம் பெருக்குதல் |
| 47. | சீரடி<br>சீறடி | சீரிய அடி (அழகான அடி)<br>சிறிய அடி |
| 48. | சீரிய<br>சீறிய | சிறந்த<br>கோபித்த |
| 49. | சுரா<br>சுறா | கள்<br>ஒருவகை மீன் |
| 50. | சுருக்கு<br>சுறுக்கு | சுருங்கச் செய்<br>விரைவு, கூர்மை |
| 51. | செரித்தல்<br>செறித்தல் | சீரணமாகுதல்<br>திணித்தல், அடக்குதல் |
| 52. | செரு<br>செறு | போர்<br>வயல், கோபி, திணி |
| 53. | சேரல்<br>சேறல் | கிட்டல்<br>செல்லுதல் |
| 54. | சொரி<br>சொறி | பொழி, கொடு<br>தினவு, நோய் (சொறி சிரங்கு) |

| | | |
|---|---|---|
| 55. | தரி<br>தறி | அணி, பொறு, தங்கு<br>வெட்டு, துணி, நெய்யுந்தறி, கம்பம் |
| 56. | தரு<br>தறு | மரம்<br>கட்டு, முடி |
| 57. | திரம்<br>திறம் | உறுதி நிலை<br>வல்லமை, பக்கம், வகை |
| 58. | திரை<br>திறை | அலை, திரைச்சீலை<br>கப்பம், அரசிறை |
| 59. | துரவு<br>துறவு | பெரிய கிணறு<br>துறத்தல், ஆசையை ஒழித்தல் |
| 60. | துரத்தல்<br>துறத்தல் | செலுத்துதல்<br>நீங்குதல், ஒழித்தல் |
| 61. | துரு<br>துறு | இரும்பழுக்கு<br>நெருங்கு, அமுக்கு |
| 62. | துரை<br>துறை | பிரபு, தலைவன்<br>இறங்குமிடம், ஆறு, பிரிவு |
| 63. | தேரல்<br>தேறல் | ஆராய்தல், பயிலல்<br>தெளிதல், தேன், தேற்வில் தேறுதல் |
| 64. | நருக்கு<br>நறுக்கு | நசுக்கு<br>துண்டி |
| 65. | நரை<br>நறை | பெண்மயிர், தலைநரை<br>தேன், வாசனை |
| 66. | நாரி<br>நாறி | பெண்<br>நாற்றம் வீசி |
| 67. | நிருத்தம்<br>நிறுத்தம் | நடம், நடனம்<br>நிறுத்துதல் |
| 68. | நிரை<br>நிறை | வரிசை, மந்தை, ஓர் அசை<br>நிறைவு, மனவடக்கம் கற்பு |
| 69. | நெரி<br>நெறி | உடை, நெருங்கு, நசுக்கு<br>மதம், வழி, புருவத்தை வளை, நீதி |
| 70. | பரந்த<br>பறந்த | பரவிய<br>பறந்த (பறவை) |
| 71. | பரவை<br>பறவை | கடல்<br>பட்சி, புள் |
| 72. | பரம்பு<br>பறம்பு | பரம்புப் பலகை<br>ஒரு மலை |
| 73. | பரி<br>பறி | குதிரை, இரங்கு, விரும்பு<br>பிடுங்கு, தோண்டு, அபகரி |
| 74. | பரை<br>பறை | பார்வதி<br>சொல், தம்பட்டம் |

| | | |
|---|---|---|
| 75. | பாரை<br>பாறை | கம்பி, கடப்பாரை<br>கற்பாறை, கல்நிலம் |
| 76. | பிர<br>பிற | பிற (பஞ்சம்) வடமொழி உபசர்க்கம்<br>மற்ற, தோன்று |
| 77. | புரணி<br>புறணி | ஊன்<br>புறங்கூறல், மட்டையின் உட்பக்கம் |
| 78. | புரம்<br>புறம் | பட்டணம், நகர், காப்பு<br>பக்கம், முதுகு, பின்பு, வெளி |
| 79. | புரவு<br>புறவு | காப்பு, ஆட்சி<br>புறா, புறம்போக்கு |
| 80. | பெரு<br>பெறு | பெரிய<br>அடை, பிள்ளை பெறு |
| 81. | பொரி<br>பொறி | நெற்பொரி<br>தீட்டு, எழுது, இயந்திரம், புலனுறுப்பு |
| 82. | பொரு<br>பொறு | ஒப்பாக, போர் செய்<br>பொறுத்துக்கொள், தாங்கு |
| 83. | பொருக்கு<br>பொறுக்கு | சோற்றுவடு, தோசைப்பொருக்கு<br>தெரிந்தெடு |
| 84. | பொருப்பு<br>பொறுப்பு | மலை<br>உத்தரவாதம், கடமை |
| 85. | மர<br>மற | கடினமாக, உணர்ச்சியறு<br>மறந்து போதல் |
| 86. | மரம்<br>மறம் | விருட்சம்<br>வீரம், பாவம், கொலை |
| 87. | மரி<br>மறி | சா, இற<br>தடு, மான், ஆட்டுக்குட்டி |
| 88. | மரு<br>மறு | வாசனை<br>குற்றம், களங்கம், மற்ற |
| 89. | மருகு<br>மறுகு | காட்டு மல்லிகை<br>மயங்கு, நெடுந்தெரு |
| 90. | மருகி<br>மறுகி | மருமகள்<br>தயங்கி |
| 91. | மரை<br>மறை | ஒரு மான், திருகு சுரை, தாமரை<br>வேதம் ,இரகசியம் |
| 92. | மாரன்<br>மாறன் | மன்மதன்<br>பாண்டியன் |
| 93. | மாரி<br>மாறி | முழை<br>வேறுபட்டு |
| 94. | முரி<br>முறி | ஓடி, கெடு<br>தளிர், இலை, பட்டையம் |

| | | |
|---|---|---|
| 95. | முருக்கு<br>முறுக்கு | ஒரு மரம்<br>திருக்கு, அதட்டு, தின்பண்டம் |
| 96. | முருகு<br>முறுகு | வாசனை, இளமை, அழகு<br>திருகு, பதங்கடந்து வேகு |
| 97. | மெய்யுரை<br>மெய்யுறை | உண்மைச்சொல்<br>கவசம், அங்கி |
| 98. | வரம்<br>வறம் | அருள்<br>வறட்சி |
| 99. | வருத்தல்<br>வறுத்தல் | துன்பப்படுதல்<br>காய்களை வறுத்தல் |
| 100. | வரை<br>வறை | மலை, மூங்கில், அளவு, வரி<br>துவட்டற்கறி, பொரித்த காய்கறி |
| 101. | விரகு<br>விறகு | தந்திரம்<br>எரிக்கும் கட்டை |
| 102. | விரல்<br>விறல் | கைவிரல்<br>வெற்றி, வலிமை |
| 103. | விரை<br>விறை | விதை, வேகமாகு<br>கடினமாகு, மரத்துப்போ |
| 104. | வீரி<br>வீறி | காளி<br>ஓங்கி |

**குறிப்பு:** காறல்/காரல், சுறண்டு/சுரண்டு, சுறீர் /சுரீர், தறுவாய/தருவாய், நறுக்கு/நருக்கு, முறி/முரி என்னும் சொற்கள் வேறுபாடின்றி வழங்குகின்றன.

## சின்ன 'ர'வும் பெரிய 'ற'வும்

"தகராறு என்பதற்கு சின்ன 'ர' வா? பெரிய 'ற' வா? என்று ஒருவர் கேட்க, அதற்கு மற்றொருவர் 'சின்ன தகராறு என்றால் சின்ன 'ர'வும் பெரிய தகராறு என்றால் பெரிய 'ற'வும் போட வேண்டும்'' என்று வேடிக்கையாகச் சொன்னதாக ஒரு துணுக்கு உண்டு.

தகராறு = தகர் + ஆறு (ஆறு என்றால் வழி: இருவருக்கும் இடையேயான நல்ல வழியை தகர்ப்பதால் அது தகராறு ஆயிற்று என்று உணர்ந்து கொண்டால், இது போன்ற ஐயங்களை தவிர்க்கலாம்).

கீழே உள்ள பட்டியலில் உள்ள பிற ரகர, றகரச் சொற்களையும் பழுதின்றிக் கற்று, பொருள் வேறுபாடு உணர்ந்து ரகர-றகர மயங்கொலிப் பிழைகளைத் தவிர்க்கலாம்.

| | | |
|---|---|---|
| 1. | அரமனை,<br>அரண்மனை | அரச மாளிகை |
| 2. | அற | நீங்க, மிக |
| 3. | அரிசி | நெல்லரிசி |
| 4. | அறிகுறி | அடையாளம் |
| 5. | அரிவாள் | கொடுவாள் |
| 6. | அரிவை | தெய்வப்பெண் |
| 7. | அரும்பு | முகை, மலர், அரும்பு |
| 8. | அருவருப்பு | வெறுப்பு |
| 9. | அருவி | நீர்வீழ்ச்சி |

| | | |
|---|---|---|
| 10. | அறுபதம் | வண்டு |
| 11. | அறுகீரை | ஒருவகைக்கீரை |
| 12. | அறைகூவல் | போருக்கழைத்தல் |
| 13. | ஆரம்பம் | துவக்கம் |
| 14. | ஆரல் | ஒருவகை மீன் |
| 15. | ஆறு | வழி, நதி |
| 16. | இறகு | பறவையின் இறகு |
| 17. | இடறி | கால் தவறி |
| 18. | இரவு | ராத்திரி, அல், யாசித்தல் |
| 19. | இறுதி | முடிவு |
| 20. | கை இருப்பு | கையிலுள்ளது |
| 21. | இறுமாப்பு | செருக்கு, மமகாரம் |
| 22. | இராட்டு | கைராட்டினம் |
| 23. | இரும்பூது | வியப்பு, தாமரைப்பூ |
| 24. | ஈர் | இரண்டு, பேன் முட்டை |
| 25. | ஈறு | இறுதி, முடிவு, பல்லீறு |
| 26. | உறக்கம் | தூக்கம் |
| 27. | உராய்தல் | தேய்தல் |
| 28. | உரிமை | சுதந்திரம் |
| 29. | உருக்கு | இளகச்செய் |
| 30. | உருசி | சுவை |
| 31. | உறுதி | திடம் |
| 32. | உறுப்பு | அவயவம் |
| 33. | உருள் | சுழல் |
| 34. | உருவி | நாயுருவி, பிடுங்கி |
| 35. | உறைப்பு | காரம் |
| 36. | உற்பத்தி | தோற்றம், துவக்கம் |
| 37. | ஊருணி | ஊரார் உண்ணும் நீர்க்குளம் |
| 38. | ஊறு | இடையூறு |
| 39. | ஊறுகாய் | ஊற வைத்த காய் |
| 40. | எரு | வரட்டி, மலம் |
| 41. | எருமை | மாடு (காரா) |
| 42. | எருக்கு | ஒரு செடி |
| 43. | எறும்பு | ஒரு பூச்சி |
| 44. | ஏர் | உழவு ஏர் |
| 45. | ஏராளம் | மிகுதி |
| 46. | ஏமாறு | வஞ்சிக்கப்படு |
| 47. | ஏற்பாடு | திட்டம் |
| 48. | ஐயுறவு | சந்தேகம் |
| 49. | ஒரு | ஒன்றாகிய |
| 50. | ஒறு | தண்டனைக் கொடு |
| 51. | ஒற்றன் | தூதன் |
| 52. | கரும்பு | கன்னல் |
| 53. | கருமாயம் | மிகுதியான விலை |
| 54. | கறையான் | செல் |
| 55. | கவர் | அபகரி |
| 56. | கவறு | சூதாடு கருவி |
| 57. | கவற்சி | துன்பம் ( கவல் : மிகுதி) |
| 58. | காரணம் | முதல், எது |
| 59. | காரியம் | செயல் |
| 60. | கிரி | மலை |

| | | |
|---|---|---|
| 61. | காறல் | காறியுமிழ்தல் |
| 62. | கிராமம் | சிற்றூர் |
| 63. | குறடு | திண்ணை, பற்றுக்குறடு |
| 64. | குறி | அடையாளம் |
| 65. | குறிச்சி | குறிஞ்சி நிலத்தூர் |
| 66. | குறிப்பு | உள்ளக்கருத்து, சைகை |
| 67. | குறள் | ஒருவகைப்பா (திருக்குறள்) |
| 68. | குருதி | இரத்தம் |
| 69. | குருடு | கண் குருடு |
| 70. | கூற்று | மொழி, எமன் |
| 71. | கூறு | சொல், பங்கு |
| 72. | கூர்மம் | ஆமை |
| 73. | சரக்கு | பண்டம் |
| 74. | சரசுவதி | கலைமகள் |
| 75. | சரடு | முறுக்கு நூல் |
| 76. | சறுக்குதல் | வழுகுதல் / வழுக்குதல் |
| 77. | சாறு | ரசம், (பனஞ்) சாறு |
| 78. | சிரங்கு | நோய் |
| 79. | சிரசு | தலை |
| 80. | சிரைத்தல் | முடி எடுத்தல் |
| 81. | சிறப்பு | மேன்மை |
| 82. | சிறுவன் | இளையன் |
| 83. | சிறை | சிறைச்சாலை |
| 84. | சீரகம் | ஒரு கறிப்பொருள் |
| 85. | சுரங்கம் | (பொன்) சுரங்கம் |
| 86. | சுறுசுறுப்பு | மிகுந்த ஊக்கம் |
| 87. | சுரை | ஒருவகைக் கொடி |
| 88. | சுவர் | மதில் |
| 89. | சுவறு | வற்று, (நீர்) கவறுதல் |
| 90. | சூரன் | வீரன் |
| 91. | சூரியன் | ஞாயிறு, பகலவன் |
| 92. | சூறை | கொள்ளை, புயற்காற்று |
| 93. | செருக்கு | அகங்காரம் |
| 94. | சேறு | மண்குழம்பு |
| 95. | சோறு | சாதம் |
| 96. | சோர்வு | தளர்ச்சி, மெலிவு |
| 97. | தறுகண் | அஞ்சாமை |
| 98. | தரை | பூமி |
| 99. | தவறு | குற்றம் |
| 100. | தவறி | பிசகி |
| 101. | தவிர் | நீக்கு |
| 102. | தார் | பூமாலை |
| 103. | தாறு | குலை, முட்கோல் |
| 104. | தாறுமாறு | குழப்பம் |
| 105. | திற | மூடியைத்திற |
| 106. | திரள் | கூட்டம் |
| 107. | திருகு | முறுக்கு |
| 108. | திருடன் | கள்ளன் |
| 109. | திறமை | ஆற்றல் |
| 110. | திறவுகோல் | சாவி |
| 111. | திரும்பு | மீண்டு போ |

| | | |
|---|---|---|
| 112. | துறக்கம் | வீடு (சொர்க்கம்) |
| 113. | துருத்தி | உலையூது, கருவி |
| 114. | துருவல் | கடைதல், துளைத்தல் |
| 115. | துறைமுகம் | கப்பல், தங்குமிடம் |
| 116. | தூரம் | தொலை |
| 117. | தூர் | வேர், அடி, சேறு |
| 118. | தூறல் | சிறுமழை |
| 119. | தெரி | தோன்று, அறி, பொருக்கிஎடு |
| 120. | தெரு | வீதி |
| 121. | தெறி | சிதறு, விரலால் உந்து |
| 122. | தேறு | அழி |
| 123. | தேர்வு | பரீட்சை, சோதனை |
| 124. | தேர் | ரதம் |
| 125. | தோறும் | (நாள்) தோறும் |
| 126. | நிறம் | வருணம் |
| 127. | நிரம்பிய | நிறைந்த |
| 128. | நிருபம் | கடிதம் |
| 129. | நிறுத்தல் | எடை போடுதல், நிற்கச் செய்தல் |
| 130. | நீறு | திருநீறு, விபூதி |
| 131. | நெருங்கி | அணுகி |
| 132. | நெருப்பு | தீ |
| 133. | நேரம் | பொழுது |
| 134. | நேருதல் | ஏற்படல் |
| 135. | பரபரப்பு | அவசரம் |
| 136. | பரிசு | வெகுமதி |
| 137. | பருந்து | ஒரு பறவை |
| 138. | பருத்தி | பஞ்சு |
| 139. | பருவம் | காலம் |
| 140. | பிறகு | பின் |
| 141. | பிறப்பு | தோற்றம் |
| 142. | பிரயாணம் | வழிப்போக்கு |
| 143. | பிரயோசனம் | பயன் |
| 144. | பிரிவு | விட்டுப்பிரிதல் |
| 145. | புறப்படு | பயணம் போ |
| 146. | புறப்பாடு | பரு, பயணம் |
| 147. | பேர் | பெயர் |
| 148. | பேறு | பாக்கியம், இலாபம்,புண்ணியம் |
| 149. | பொரியல் | பொரியல் (கறி) |
| 150. | பொருட்டு | காரணம் |
| 151. | பொருத்தம் | தகுதி |
| 152. | பொறுமை | சாந்தம், சகிப்புத் தன்மை |
| 153. | பொறாமை | மனவெரிச்சல் |
| 154. | மருமகள் | மகன் மனைவி |
| 155. | மருமகன் | மகள் கணவன் |
| 156. | மருவல் | பொருந்துதல் |
| 157. | மருவீடு | மணமக்களை வீட்டுக்கழைத்தல் |
| 158. | முறம் | சுளகு (சொளவு என்பது தென்பாட்டி நாட்டு வழக்கு |
| 159. | முரண் | மாறுபடுதல் |
| 160. | முருகன் | அழகன், கந்தன் |
| 161. | முருங்கை | ஒரு மரம் |

| | | |
|---|---|---|
| 162. | முருகு | முரடு, அழகு |
| 163. | வரலாறு | சரித்திரம் |
| 164. | வரன்முறை | அடிப்பட வந்த முறை |
| 165. | வறுவல் | வறுத்த கறி |
| 166. | வறுமை | தரித்திரம் |
| 167. | வரையறை | எல்லை |
| 168. | வர்க்கம் | இனம் |
| 169. | வற்புறுத்து | வலிந்து சொல் |
| 170. | விசிறி | காற்றிசை கருவி |
| 171. | விருப்பம் | ஆசை |
| 172. | விருந்து | உணவளித்தல், புதுமை |
| 173. | விரைவு | வேகம் |
| 174. | வீறிட்டு | சத்தமிட்டு அலறி |

- ‘அருவி’ என்ற மரபார்ந்த தமிழ்ச்சொல் இருப்பதை மறந்து “Water Falls” என்கிற ஆங்கிலச் சொல்லை “நீர்வீழ்ச்சி” என்று மொழியாக்கம் செய்து பயன்படுத்தி வருகிறோம். இதை, ‘அருவியை நீர்வீழ்ச்சி என்று சொல்லும்போது மனம் பதைபதைக்கிறது’ என்று தன் கவிதை ஒன்றில் குறிப்பிட்டடர் குற்றாலத்துக்கு அருகில் உள்ள தென்காசிக் கவிஞர் விக்கிரமாதித்யன்.

- பண்டைப் பழந்தமிழ் நூல்களில் ‘அறுபதம்’ என்பர். வண்டு, எறும்பு, கொசு போன்ற பூச்சி இனங்கள் ஆறு கால்கள் உடையனவாக இருப்பதால், விஞ்ஞானிகள் அவற்றை ‘Hexa Poda’ (ஆறு கால் இனம்) என்பர். பழந்தமிழர்கள் இதை நுண்மையாக உணர்ந்து வண்டை ‘அறுபதம்’ என்றழைத்தது வியப்பூட்டுகிறது.

- ‘ஈர்’ என்பது பேனின் முட்டை, தலையில் உள்ள ஈருகளை அகற்றப் பயன்படுத்தும் சீப்பு போன்ற ஒரு பொருளைத் தென்மாவட்டத்தில் ‘ஈர்வலி’, ஈர்கொல்லி என்பதன் மருஉ. ஈர்த்துக்கொல்லுதலால் ஈர்கொல்லி என்றாயிற்று.

- ரத்தம், எமன் போன்றவை வட சொற்கள். தமிழ் மொழியில் ர,ய போன்ற எழுத்துகள், நன்னூல் இலக்கண விதிப்படி மொழி முதல் எழுத்துகளாகாது என்பதால் இந்தச் சொற்களை இரத்தம், இயமன் என்றே இலக்கணத் தமிழில் எழுதுவர். பாட நூல் தமிழில் பின்பற்றும் இந்த வழக்கத்தை பத்திரிகை தமிழ் ஏற்பதில்லை.

- அசகாய சூரன் என்றதொடரை அடிக்கடி கேள்விப்பட்டிருப்போம்.அசகாய சூரன்=அ +சகாய+சூரன் சகாயம் என்றால் உதவி, பிறர் உதவியின்றி தானே தனித்து நின்று வெல்பவனைத்தான் ‘அசகாய சூரன்’ என்கிறோம்.

## 2. லகர, எகர, ழகரச் சொற்களின் பொருள் வேறுபாடுகள்

| | | |
|---|---|---|
| 1. | அளகு<br>அழகு<br>அலகு | - பெண்பறவை, கோழி<br>- அலங்காரம்<br>- அளவைக்கூறு |
| 2. | அளி<br>அழி<br>அலி | - வண்டு, அருள், கரி<br>- கெடு<br>- திருநங்கை |
| 3. | அளை<br>அலை<br>அழை | - துழாவு, கல், தயிர், குகை<br>- கடல்அலை, திரி<br>- கூப்பிடு, பெயரிடு |
| 4. | ஆளி<br>ஆலி<br>ஆழி | - அரசன், ஆள்வோன், சிங்கம்<br>- மழைத்துளி<br>- கடல், சக்கரம், மோதிரம் |

| | | |
|---|---|---|
| 5. | ஆள்<br>ஆல்<br>ஆழ் | - புழங்கு, அரசு செய்,ஆண்மகன், ஊழியன்<br>- ஆலமரம்<br>- அமுக்கு, தாழ்த்து |
| 6. | ஆள்வார்<br>ஆழ்வார் | - ஆளுவோர்<br>- திருமால் அடியவர் |
| 7. | இளகு<br>இலகு | - நெகிழ்தல்<br>- எளிது |
| 8. | இளை<br>இலை<br>இழை | - மெலிதல், களைத்தல்<br>- மரத்தின் இலை<br>- தேய், செய், நூல் |
| 9. | உளவு<br>உலவு<br>உழவு | - வேவு, மறைவு<br>- நட<br>- பயிர்த்தொழில், வருத்தம், முயற்சி |
| 10. | உளுக்கு<br>உலுக்கு | - சுளுக்கு<br>- உலுக்குதல் |
| 11. | உளை<br>உலை<br>உழை | - நோகு, சேறு, பிடரிமயிர்.<br>- நீர் உலை, வருந்து, அணு உலை<br>- வருந்தி வேலை செய், மான், பக்கம் |
| 12. | எள்<br>எல் | - நிந்தை, ஒரு தானியம், எளிமை<br>- சூரியன் |
| 13. | ஒளி<br>ஒலி<br>ஒழி | - மறை, வேதம், வெளிச்சம், புகழ்<br>- சத்தம்<br>- அழி, நீக்கு |
| 14. | கள்<br>கல் | - மது<br>- படிப்பு |
| 15. | களம்<br>கலம் | - போர்க்களம், நெற்களம்<br>- மட்கலம், பாத்திரம் |
| 16. | களர்<br>கலர் | - விளையா நிலம்<br>- கீழ்மக்கள் |
| 17. | களி<br>கலி<br>கழி | - மகிழ்ச்சி<br>- ஆரவாரம், செருக்கு<br>- நீக்கு, கோல், மிகுந்த |
| 18. | களை<br>கலை<br>கழை | - முகவழகு, நீக்கு, இளை<br>- சாத்திரம், ஆடை<br>- கோல், கரும்பு, மூங்கில் |
| 19. | காளி<br>காலி<br>காழி | - துர்க்கை<br>- (உருதுச்சொல்) வேலை காலி இல்லை<br>- சீகாழி |
| 20. | காளை<br>காலை | - எருது, வாலிபன்<br>- நாளின் சிறுபொழுதுகளில் ஒன்று |
| 21. | கிளவி<br>கிழவி | - சொல், (எழுதாக் கிளவி)<br>- உரியவள், முதியாள் |

| | | |
|---|---|---|
| 22. | கிளி<br>கிலி<br>கிழி | - தத்தை<br>- பயம்<br>- கிழித்தல், பண முடிச்சு |
| 23. | கீள்<br>கீழ் | - கோவணம், தோண்டு<br>- கீழே, தாழ்வு |
| 24. | குலம்<br>குளம் | - சாதி<br>- நீர்நிலை |
| 25. | குலவி<br>குளவி<br>குழவி | - நெருங்கி, மகிழ்ந்து<br>- ஒருவகை பூச்சி<br>- குழந்தை |
| 26. | குலை<br>குழை | - கொத்து, காய்க்குலை<br>- குண்டலம், நடுக்கம் |
| 27. | குளம்பு<br>குழம்பு | - விலங்கின் அடி<br>- சேறு, காய்கறிக் குழம்பு |
| 28. | குளி<br>குழி | - முழுகு<br>- கிடங்கு, பள்ளம் |
| 29. | கூளம்<br>கூலம்<br>கூழம் | - குப்பை, வைக்கோல் கூளம்<br>- தானியம்<br>- எள் |
| 30. | கூளி<br>கூலி<br>கூழி | - பேய்<br>- செய்கூலி<br>- குள்ளப்பசு |
| 31. | கேள்<br>கேழ் | - செவி கொடு, நட்பு<br>- பொருந்து, நிறம், ஒளி |
| 32. | கேளி<br>கேலி | - மகளிர் விளையாட்டு<br>- கிண்டல் |
| 33. | கொல்<br>கொள் | - சாகச்செய்<br>- வாங்கு |
| 34. | கொளு<br>கொழு | - பொருந்து<br>- கொழுப்பாகு, ஏர்க்காறு |
| 35. | கொளுந்து<br>கொழுந்து | - எரி<br>- இள இலை, மருகொழுந்து |
| 36. | கோல்<br>கோள் | - கொம்பு<br>- புறங்கூறுதல், கிரகம் |
| 37. | கோளி<br>கோழி | - கொள்பவள், ஆல், அத்தி<br>- ஒரு பறவை |
| 38. | சூள்<br>சூல்<br>சூழ் | - ஆணை, சபதம்<br>- கர்ப்பம்<br>- ஆராய், முற்றுகை இடு, வளை |
| 39. | சோளம்<br>சோழம் | - ஒரு தானியம்<br>- ஒரு நாடு |
| 40. | தளை<br>தலை<br>தழை | - கட்டு, விலங்கு<br>- சிரம்<br>- இலை, தழைத்தோங்கு |

| | | |
|---|---|---|
| 41. | தாளம்<br>தாழம் | - இசைக்கால அளவு<br>- தாழ்வு |
| 42. | தாளி<br>தாலி<br>தாழி | - பனை<br>- மாங்கல்யம்<br>- பெரும்பானை, வாயகன்ற சட்டி |
| 43. | தாள்<br><br>தால்<br>தாழ் | - கால், முயற்சி, செடி, முதலியவற்றின் அடித்தண்டு.<br>- நாக்கு<br>- கீழாகு, கதவடைகோல், பணி |
| 44. | தெளி<br>தெழி | - தெளிவாகு, சிதறு<br>- அதட்டு, வருத்து |
| 45. | தோளன்<br>தோழன் | - தோளையுடையவன்<br>- நண்பன் |
| 46. | தோல்<br>தோள் | - உடம்பின் தோல்<br>- புயம் |
| 47. | நாளி<br>நாழி | - மூங்கில், நாய், கள்<br>- படி, நாழிகை |
| 48. | நலிவு<br>நளிவு | - நோய்<br>- செறிவு |
| 49. | நீலம்<br>நீளம் | - நிறம்<br>- நீட்டம் |
| 50. | பலி<br>பழி | - பலியிடுதல்<br>- குற்றம் |
| 51. | பளு<br>பழு | - சுமை<br>- முதிர், கனி |
| 52. | பாலம்<br>பாளம் | - ஆற்றுப்பாலம், மேம்பாலம்<br>- வெடிப்பு, உலோகத்துண்டு |
| 53. | பாளை<br>பாலை | - பூ மூடு, மடல்<br>- பாலைத் திணை |
| 54. | பீளை<br>பீழை | - கண்மலம்<br>- புழுங்குதல், துன்பம் |
| 55. | புளுகு<br>புழுகு | - பொய்<br>- புனுகு |
| 56. | பூளை<br>பூழை | - இலவம் பஞ்சு<br>- துவாரம், சிறுவாசல் |
| 57. | பொளி<br>பொலி<br>பொழி | - கொத்து, சுத்தியாலடி<br>- பொலிதல்<br>- ஊற்று, சொரி |
| 58. | போளி<br>போலி | - ஒருவகையப்பம்<br>- சாயல், இலக்கணப்போலி |
| 59. | மலை<br>மழை | - பெருங்குன்று<br>- வான் பொழி நீர் |

| | | |
|---|---|---|
| 60. | முளவு<br>முழவு | - முள்ளம் பன்றி<br>- மத்தளம் |
| 61. | முளை<br>முழை | - தோன்று, விதை முனை<br>- குகை |
| 62. | மூளை<br>மூழை | - மண்டை உள்ளீடு<br>- அகப்பை, துடுப்பு |
| 63. | மூள்<br>மூழ் | - மிகு<br>- அமிழ்ந்து போதல் |
| 64. | வளம்<br>வலம் | - அழகு, செல்வம்<br>- வலது பக்கம் |
| 65. | வளி<br>வலி<br>வழி | - காற்று<br>- வலிமை, நோவு<br>- பாதை, நிரம்பி விழு |
| 66. | வளை<br>வலை<br>வழை | - வட்டமாக்கு, துவாரம்<br>- மீன்வலை, கொசுவலை<br>- சுரபுன்னை மரம் |
| 67. | வாளி<br>வாலி<br>வாழி | - அம்பு, வளையம்<br>- சுக்ரீவனின் சகோதரன்<br>- வாழ்க |
| 68. | வாளை<br>வாழை | - ஒரு வகை மீன்<br>- ஒரு மரம் |
| 69. | வாள்<br>வால்<br>வாழ் | - ஒளி, ஒரு கருவி<br>- விலங்கின் வால், வெண்மை, தூய்மை<br>- உயிரோடு இரு |
| 70. | விளி<br>விழி | - கூப்பிடு, இற<br>- கண் திற, பார் |
| 71. | விலா<br>விழா | - விலா எலும்பு (மார்பு எலும்பு)<br>- திருவிழா, கொண்டாட்டம் |
| 72. | விளை<br>விழை | - வளர்முதிர், உண்டுபண்ணு<br>- விரும்பு |
| 73. | வெள்ளம்<br>வெல்லம் | - நீர்ப்பெருக்கு<br>- இனிப்பு வகைகளில் ஒன்று |
| 74. | வேளம்<br>வேழம் | - சிறைக்களம்<br>- கரும்பு, மூங்கில், யானை |
| 75. | வேலை<br>வேளை | - தொழில், கடல்<br>- சமயம் |
| 76. | வேல்<br>வேள் | - வேலாயுதம்<br>- விருப்பம், முருகன் |

குறிப்பு: இழிவு/இளிவு, உழறு/உளறு, உழுந்து/உளுந்து, குழறு/ குளறு, சுழி/சுளி, துழாய் /துளாய், பவழம் /பவளம் என்பன வேறுபாடின்றி வழங்குகின்றன.

## லகர, ளகர, ழகர சொற்களும் அவற்றின் பொருளும்

| | | |
|---|---|---|
| 1. | அளகம் | பெண்மயில் |
| 2. | அளம் | உப்பளம் |
| 3. | அழுக்கு | மாசு, பொறாமை |
| 4. | அள் | அள்ளு |
| 5. | ஆல் | ஆலமரம் |
| 6. | ஆழம் | பள்ளம் |
| 7. | இழ | தொலை, போக்கடி |
| 8. | உளம் | உள்ளம் |
| 9. | உளறு | பிதற்று |
| 10. | உழி | இடம், ஏழாம் வேற்றுமையுருபு |
| 11. | உழுந்து | ஒரு வகைத் தானியம் |
| 12. | எழுதல் | உயர்தல், கிளம்புதல், வரைதல் |
| 13. | எழுத்தாணி | ஓலையிலெழுதுதல் கருவி |
| 14. | எளிது | இலேசு |
| 15. | எளிய | அற்ப |
| 16. | களவு | திருட்டு |
| 17. | களிம்பு | துரு, பூச்சு மருந்து |
| 18. | கழுகு | ஒரு பறவை |
| 19. | கழுதை | ஒரு விலங்கு |
| 20. | கழுவல் | தூய்மை செய்தல் |
| 21. | குழு | கூட்டம் |
| 22. | கேழ்வு | தோணிக்கூலி |
| 23. | கேழ்வரகு | ஒரு தானியம் |
| 24. | சுளி<br>சுழி | சினத்தல்<br>நீர்ச்சுழி, வட்டம், கடல் |
| 25. | தொளை | துவாரம் |
| 26. | நுழை | புகு |
| 27. | பளிச்சு | ஒளி வீச்சு குறிப்பு |
| 28. | பாழ் | வீண், அழிவு |
| 29. | மாளிகை | அரண்மனை, பெருவீடு |
| 30. | மாளுதல் | இறத்தல் |
| 31. | மிளகு | கறிமிளகு |
| 32. | மூளி | காதறை, விளம்பில்லாதது |
| 33. | மேழி | கலப்பை |
| 34. | மேளம் | தவில் வாத்தியம் |
| 35. | வேளை | காலம். ஒரு பூண்டு |
| 36. | குளம் | தடாகம் |
| 37. | குளவி | வண்டு வகை |

## 3. னகர, ணகரச் சொற்களின் பொருள் வேறுபாடுகள்

| | | |
|---|---|---|
| 1. | அன்னம்<br>அண்ணம் | சோறு, பறவை<br>மேல்வாய் |
| 2. | ஆன்<br>ஆண் | பசு<br>ஆண்பிள்ளை |
| 3. | ஆனி<br>ஆணி | தமிழ் மாதம்<br>இரும்பு ஆணி |
| 4. | உன்<br>உண் | முன்னிலை ஒருமை<br>உணவு |

| | | |
|---|---|---|
| 5. | உன் கண்<br>உண் கண் | உன்னுடைய கண்<br>மை பூசிய கண் |
| 6. | ஊன்<br>ஊண் | மாமிசம், உடம்பு<br>உணவு |
| 7. | என்<br>எண் | தன்மை, ஒருமை<br>நினை, எண்கள் |
| 8. | கன்னன்<br>கண்ணன் | கர்ணன்<br>திருமால் |
| 9. | கனம்<br>கணம் | பளு<br>நொடி, கூட்டம், மரியாதை விளி |
| 10. | கனை<br>கணை | குரல் ஒலி<br>அம்பு, ஒரு நோய் |
| 11. | குனி<br>குணி | வளை<br>ஆலோசனை செய், குணமுடையது. |
| 12. | கனி<br>கணி | பழம், இரங்கு<br>யூகி, அளவிடு |
| 13. | சுனை<br>சுணை | மலை நீரூற்று<br>இலை முள், காய்முள் |
| 14. | தன்மை<br>தண்மை | இயல்பு<br>குளிர்ச்சி |
| 15. | தனி<br>தணி | தனிமை<br>ஆறுதல் பெறு |
| 16. | தின்<br>திண் | சாப்பிடு<br>உறுதி |
| 17. | தினை<br>திணை | ஒரு வகை தானியம்<br>குலம், ஒழுக்கம் |
| 18. | துனி<br>துணி | வெறுப்பு<br>ஆடை, உறுதி செய் |
| 19. | நுனி<br>நுணி | முனை<br>நுட்பமான சிந்தனை |
| 20. | பனி<br>பணி | பனித்துளி<br>வேலை, வணங்கு |
| 21. | பனை<br>பணை | ஒரு மரம்<br>பருத்தல், மூங்கில் |
| 22. | பேன்<br>பேண் | தலைப்பேன்<br>விரும்பு |
| 23. | மன்<br>மண் | அரசன்<br>பூமி |
| 24. | மனம்<br>மணம் | உள்ளம்<br>வாசனை |

| | | |
|---|---|---|
| 25. | மனை<br>மணை | வீடு<br>உட்காரும் பலகை |
| 26. | மான்<br>மாண் | ஒரு விலங்கு<br>பெருமை |
| 27. | மானி<br>மாணி | மானமுடையவன்<br>அளக்கும் கருவி |
| 28. | வன்மை<br>வண்மை | வலிமை<br>கொடைப்பண்பு |

APPOLO STUDY CENTRE